අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 | +94112784846
isurupaya@moe.gov.lk | www.moe.gov.lk

මගේ අංකය / எனது இல. / My Ref. ED/01/12/02/06/02-(I) | ඔබේ අංකය / உமது இல / Your Ref. | දිනය / திகதி / Date 2018.10.

சுற்றறிக்கை இலக்கம் - 39/2018

சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி / உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல அதிபர்கள்,

## க.பொ.த (உ.த) தொடர்புச் சாதன மற்றும் ஊடகக் கற்கை பாடவிதானம்

க.பொ.த (உ.த) தொடர்புச் சாதன மற்றும் ஊடகக் கற்கை பாடவிதானம் தொடர்பில் இதற்கு முன்னர் அனுப்பப்பட்ட **ED/01/12/11/12** மற்றும் **2017.12.12** ஆம் திகதிய ஆலோசனைக் கடிதம் இரத்துச் செய்யப்படுவதுடன் இதற்குப் பின்னர் இச் சுற்றறிக்கையின் ஆலோசனைகளே அமுற்படுத்தப்படும்.

1.0. க.பொ.த (உ.த) பாடங்களுக்காக 2015 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பாடவிதானச் சுற்றின் கீழ் தேசிய கல்வி நிறுவகத்தினால் புதிய பாடவிதானம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

2.0. 2019 ஆம் ஆண்டில் க.பொ.த (உ.த) பரீட்சைக்கு முதற் தடவையாக தோற்றவுள்ள மாணவ மாணவிகளுக்கு 2008 ஆம ஆண்டு தொடக்கம் அமுல்படுத்தப்படும் பழைய பாடவிதானம் தொடர்ந்தும் அமுல்படுத்தப்பட வேண்டும்.

3.0. 2020 ஆம் ஆண்டில் க.பொ.த (உ.த) பரீட்சைக்காக முதற் தடவையாக தோற்றும் மாணவ மாணவிகளுக்கு புதிய பாடவிதானம் அமுல்படுத்தப்பட வேண்டியதுடன் அம்மாணவர்களுக்காக 2018 முதலாவது கல்வி ஆண்டு தொடக்கம் குறித்த புதிய பாடவிதானம் அமுல்படுத்தப்பட வேண்டும்.

4.0. இப் புதிய பாடவிதானத்தை அமுல்படுத்துவதற்காகத் தேவையான பாடவிதானம் மற்றும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி தேசிய கல்வி நிறுவகத்தினால் வகுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய க.பொ.த (உ.த) தொடர்புச் சாதன மற்றும் ஊடகக் கற்கை பாடவிதானம் தொடர்பில் உரிய தரப்பினரை அறிவுறுத்தி எதிர்காலச் செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு இத்தால் அறிவிக்கிறேன்.

சுனில் ஹெட்டிஆரச்சி
செயலாளர்
கல்வி அமைச்சு

**பிரதிகள்:-**

01. சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள் - அ.கொ.பொ
02. தலைவர், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு - அ.கொ.பொ
03. பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் - அ.கொ.பொ
04. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம் - அ.கொ.பொ
05. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம் - அ.கொ.பொ